RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s832

# சிலப்பதிகாரத்தில் காணலாகும் நம்பிக்கைகள்

**த. நாகம்மாள் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர், உயர் கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா

# Beliefs found in Silappathikaaram

**T. Nagammal [a, *]**

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science & Higher Education for Women, Coimbatore- 641043, Tamil Nadu, India

* Corresponding Author:
19764naga@gmail.com

Received: 01-06-2021
Revised: 01-05-2022
Accepted: 23-05-2022
Published: 21-07-2022

Check for updates

**ABSTRACT**

The first epic to appear in Tamil was Silapathikaaram, composed by Ilangovadikal. It is an amalgamation of art, music, and drama. This is an epic that excels in language, content, literary style, and appreciation. Silapathikaaram is one of the twin epics that appeared in the second century AD. Faith is an expression of a person's inner feelings. Beliefs are created by people. The Epic explains what is happening in human life. Along with the mixture of fantasy, Silappathikaaram is an epic that embodies the epitome of human life. Beliefs are further developed by individual and community consciousness. Traditional beliefs are passed down from one generation to another over time. One of the hopes for human life can be said to be dreams. Beliefs have existed among people since ancient times. Every human being has different types of beliefs. Silapathikaaram is one of the best epics of femininity in the history of world literature. Beliefs influencing human life are also found in literature. The aim of this article is to examine the beliefs found in the first epic, Silapathikaaram.

**Keywords:** Silapathikaaram, Ilangovadikal, Beliefs, Twin Epics

## முன்னுரை

தமிழில் தோன்றிய முதல் காப்பியம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம். இது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்க் காப்பியமாகத் திகழ்கிறது. மொழியாலும், பொருளாலும், இலக்கிய நயத்தாலும், இன்சுவையாலும் முதன்மைப் பெறும் காப்பியம் இது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றானது சிலப்பதிகாரம். மக்களின் உள் உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அமைவது நம்பிகையாகும். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்படுகின்றன. மனித வாழ்வில் நடைபெறுவதை விளக்கி காட்டுவது காப்பியம். அவை கற்பனைகள் கலந்த கலவையோடு மானுட வாழ்வை கூறும் காப்பியமாக சிலப்பதிகாரம் திகழ்கின்றன.

தனி மனித உணர்வினாலும் சமுதாய உணர்வினாலும் நம்பிக்கைகள் மேலும் வளர்கின்றன. மரவு வழி நம்பிக்கைகள் காலம் காலமாக ஒரு தலை முறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்கு பரவி வருகின்றன. அவற்றில் மனித வாழ்விற்கு நடைபெறும் நம்பிக்கைகளில் ஒன்று கனவு என கூறலாம். நம்பிக்கைளின் மிகப் பழங்காலத் தொட்டே மக்களிடையே நிலவி வருகின்றன. ஒவ்வொரு மனிதனிடமும் பல்வேறு வகையான நம்பிக்கைகள் உள்ளன. உலக இலக்கிய வரலாற்றில் பெண்மைக்கு முதன்மை தருகின்ற ஓர் உன்னத காப்பியமாக திகழ்வது சிலப்பதிகாரம். மனித வாழ்க்கையில் செல்வாக்குப் பெற்ற நம்பிக்கைகள் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. முதல்

காப்பியமான சிலப்பதிகாரத்தில் காணலாகும் நம்பிக்கைகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நம்பிக்கை பற்றி விளக்கம்

நம்பிக்கை என்பது ஓர் உளவியல் சார்ந்த விடயமாகும். ஒன்றின் மீது அல்லது ஒருவர் மீது வைக்கும் மிகுந்த பற்று அல்லது கூடிய விருப்பு போன்றவற்றின் அடிப்படையில் அதனை உண்மை என நம்பும் மனங்களில் ஏற்படும் நம்பிக்கைகள் பலவாறாக இருக்கின்றன. பண்பாடு என்பது தமிழரின் வாழ்வில் பிணைக்கப்பட்ட ஒன்றாகும். மக்களின் மனதில் இன்றளவும் பதிந்து வருகின்றது. ஆ. இராசேந்திரன் என்பவர்; மக்களின் சமுதாயம் ஓர் ஆலமரம் என்றால்; அதன் ஆணிவேர் நம்பிக்கையே ஆகும் என்று கூறுகிறார். கனவு, பல்லி சொல் கேட்டல், கண் துடித்தல், சகுணம் பார்த்தல் இவை போன்ற பரந்து பட்ட கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது நம்பிக்கையின் என்ற வேர்.

## சிலப்பதிகாரத்தில் கனவு

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மூன்று கனவுகளை பதிவு செய்து இருக்கிறார். இம்மூன்று கனவுகளும் நனவில் நடக்கின்றன. காரணம் பின்னால் நடக்கவிருக்கும் கனவு குறித்த செய்தியினை முன் கூட்டியே வெளிப்படுத்துதல், காண்கின்ற கனவிற்கும் நடக்கின்ற நிகழ்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு நம்பப் படுகின்றன. சிலம்பில் முதலில் கண்ணகியின் கனவு வெளிப்படுத்தப்படுகிறது. அடுத்ததாக கோவலன் கனவு குறித்தும், இறுதியாக பாண்டிமாதேவியின் கனவு குறித்தும் இளங்கோவடிகள் வரையறை செய்துள்ளார்.

## சிலப்பதிகார மாந்தர்களும் ஊழ் பற்றிய நம்பிக்கைகளும்

கோவலன் கண்ணகியை அழைத்துக் கொண்டு புகார் நகரை நீங்கும்போது ஊழ்வினை முன் நிறுத்துவார் அடிகள். முதல் வெண்பாவில்,

"வினைகடைக்கூட்ட வியம் கொண்டான்" (Manikkavasagan, 2016).

எனவும், இரண்டாம் வெண்பாவில்

"மூதை

வினைகடைக் கூட்ட வியங்கொண்டான்"

எனவும் இயற்றுவார் (Manikkavasagan, 2016). இதற்கு உரை வடிக்கும் அடியார்க்கு நல்லார் "முற்பருவத்தில் தான் செய்த தீவினை நெடுங்காலம் நின்று நெஞ்சை ஒருப்படுத்துதலானே அவ்வினையினது. ஏவலைக் கொண்டான்" எனக் குறிப்பர். தலைமக்கள் இருவரும் வேறு நாட்டிற்குப் புறப்பட்டமைக்குக் காரணம் பழவினை என்று காப்பிய ஆசான் கூறுகிறார். அவ்வினை எஃது என்று காப்பியத்தின் பிற்பகுதியில் விரிவாகப் புனையவும் செய்கிறார் அவர்.

## கதை மாந்தர்களும் ஊழின் அழுத்தமும்

சிலப்பதிகாரத்தின் மாந்தர்கள் பல இடங்களிலே தற்கூற்றாக வருமிடங்களில் வினை பற்றிப் பேசுவர். இரங்கல் குறிப்பு அவ்விடங்களில் மேம்பட்டு நிற்கும். கூடுதலாகத் தலை மாந்தர்களுடன் பயணிப்பாரும் இதனை மொழிகுவர். ஒரு பதச்சோறு: காடுகாண் காதையில் மாங்காட்டு மறையவன் மூன்று வழிகளை அடையாளங்காட்டுவார்.

"இறந்த பிறப்பின் எய்தியவெல்லாம்

பிறந்த பிறப்பில் காணாயோ நீ" (Natarajan, 2017).

என்று கூறுகிறாள் அவளே, ஊர்காண் காதையில்,

“மறத்துறை நீங்குமின் வல்வினை ஊட்டுமென்று

அறத்துறை மாக்கள் திறத்தில் சாற்றி

நாக்கடிப்பாக வாய்ப்பறை அறையினும்

யாப்பறை மாக்கள் இயல்பில் கொள்ளார்”

கோவலன் அழுது தீர்க்கும் கட்டங்களில் ‘வல்வினை’ என்பது போன்ற சொல்லாடல்கள் ஆட்சி புரியும் (Natarajan, 2017). ஆயர் குடியிருப்பில்,

“மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ”

என்பது கவனிக்கத்தக்கது. கண்ணகியின் உச்சரிப்பில்,

“மன்னுறு துயர்செய்த மறவினை அறியாதேற்கு

என்னுறு வினைகாணா இதுவென உரையிரோ”

என்று வரும் வரிகள் கணக்கிலெடுக்கப்பெற வேண்டியவை (Manikkavasagan, 2016).

## கனவு நம்பிக்கை

தமிழ் இலக்கணமாம் தொல்காப்பியத்துள் ஆங்கு சுரந்து மிகும் காதலால் மனத்தக்கத்தோரை என்னும் நெஞ்சத் திறனை நிலைக்களனாகக் கொண்டும் காதலர் பிரிவில் காமம் இடையீடு பட்டவழி எழுத் மனநிலையினைத் தழுவிக் கொண்டும் கனவு வரும் என கூறப்படுகிறது. வாழ்க்கையில் நிகழும் நிகழ்காலச் சிக்கல்களையும், கலக்கத்தையும் உள்ளத்து அடைப்பிலிருந்து கனா வெளியீடு செய்து காட்டிவிடும் என்பார்கள். கனவுகளையே நல்ல கனவு, கெட்ட கனவு என இருவகையாகப் பிரிப்பர். மக்களுக்கு நன்மையோ, தீமையோ கனவு மூலம் தெரிந்து விடும் என நம்புகின்றனர் (Manikkavasagan, 2016).

## சாபங்கள்

நாம் செய்யும் செயல்களின் மூலம் பாதிக்கக்கூடியவர்கள் மனம் நொந்து, கோபப்பட்டு சொல்லுகின்ற சொற்கள் பலிக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி வருகின்றன. சங்க இலக்கியங்களையும், பிற இலக்கியங்களையும் பார்க்கும் போது அவைக் கற்பனை போலவும், காட்சியளிக்கிறது. அக்கால மக்கள் இதனை உண்மை என்றே நம்பினர். கவுந்தியடிகள் கண்ணகியையும், கோவலனையும் உடன் அழைத்துக் கொண்டு மதுரையை நோக்கிச் செல்லும்போது, வழிப்போக்கன் ஒருவன் கண்ணகி கோவலனை யார் என்று கவுந்தடிகளும் வினவுகிறான். அதற்கு அவர் இருவரும் தம்மக்கள் என்று கவுந்திடிகள் உரைக்க, உம் மக்கள் எப்படி கணவன் மனைவி ஆவார்கள் என கேலி செய்ததால் நரியாகும் படி சபித்தார். “முள்ளுடைக் காட்டின் முது நரி யாகெனக் கவுந்தி யிட்ட தவந்தரு சாபம்” சிலப்பதிகாரப் பாடல் மூலம் புலனாகிறது. சிலப்பதிகாரத்தில் சாபங்கள் பற்றிய குறிப்புகள் பல உள்ளன. அவற்றில் அகத்தியர் சாபம், பரத்தை தூத்தனன் சாபம், ஊர்வசி சாபம், நீலி இட்ட சாபம், கவுந்தியடிகள் இட்ட சாபம், கண்ணகி இட்ட சாபம் என்று காப்பியங்களில் பல காணப்படுகின்றன.

## தெய்வகள் பற்றிய நம்பிக்கை

மனிதன் அச்ச உணர்வினால் நம்பிக்கை தோன்றியது. நம்பிக்கை தான் மனிதனைக் கடவுள் நெறிக்கு இட்டுச் சென்றது என மானிடவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். மனிதன் தன் ஆற்றல் ஓர் வரம்புக்குட்பட்டது என்பதை உணர ஆரம்பித்த நிலையில் கடவுள் பற்றிய நம்பிக்கையை ஊட்டியது.

இதை உறுதிப்படுத்தும் வகையில் சிலப்பதிகாரத்தில் தெய்வத்திடம் முறையிட்டால் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையினை மாலதி கதை வழி விளக்கப்படுகிறது. சோமகுண்டம், சூரிய குண்டம் ஆகியவற்றில் குளித்துக் காமனைத் தொழுதால் இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் கணவனோடு உடன் உறைந்து மகிழ்வர் என்ற நம்பிக்கையைக் கீழ்க்கண்ட அடிகள் புலப்படுத்துகின்றன. "சோமகுண்டம், சூரிய குண்டம், துறைமூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுதார் கணவரோடு புறுவ ருலகத்துத் தையலாற் போகஞ் செய் பூமியினும் போய்ப்பிறப்பர்" என்ற சிலப்பதிகாரப் பாடல் மூலம் அறியமுடிகின்றன (Arivu Nambi, 2017).

## சகுனங்கள்

சங்க காலத்தில் விரிச்சி நிற்றல். நற்சொல், வாய்ப்புகள் பறவாய்ப்புகள் வாய்ச்சொல், அசரீரி என்றெல்லாம் கூறப்படும் உலகில் உள்ள மனித இனம் அனைத்தும் சகுனம் பார்க்கும் நம்பிக்கை, பழங்காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. சகுனம் பார்ப்பதை இப்பாடல் "கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும் உண்ணிறை கரந்தகத் தொளிந்து நீரு குத்தன எண்ணுமுறை இடத்திலும் வலத்தினுந் துடித்தன" என்ற சிலம்பு பாடல் வழி அறியமுடிகின்றது. பெண்களின் இடக்கண் துடித்தல் நல்ல சகுனம் என்றும், வலக்கண் துடித்தால் கெட்ட சகுனம் என்றும் கருதப்பட்டது. பால் உரையாமையும், காளை கண்ணீர் விடுவதும் வெண்ணெய் உருகாமையும் பறவை குறித்தும் அக்காலத்தில் நம்பிக்கையாகக் கொண்டுள்ளது (Arivu Nambi, 2017).

## கோவலனின் கனவு

மாடலமறையோனிடம் கோவலன் தான் கண்ட கனவினை தெரிவிக்கின்றான். ஆடை கொள்ளப்பட்டு எருமைக் கடாவின் மீதுதான் ஊர்ந்து சென்றதாகக் கோவலன் தான் கண்ட கனவின் காட்சியைக் கூறுகிறான். இதை, "கோவலன் கூறும் கூறைகோள் பட்டுக் கோட்டுமா ஊரவும்" என்ற அடிகள் மூலம் உணர்த்துகிறார். எனவே எமனின் ஊர்த்தியான எருமை அவனது இறப்பை முன் கூட்டியே உறுதிப்படுத்துகிறது (Arivu Nambi, 2017).

## கோப்பெருந்தேவியின் கனவு நம்பிக்கை

குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும் கடைமணி இன்குரல் கான்பேன்காண் எல்லா திசையிரு நான்கும் அதிர்ந்திரும் அன்றிக் கதிரை இருள் விழுங்கக் காண்பெண் காண் எல்லா இங்கொடி வில்லி வெறும்பகல் வீழும் கடுங்கதிர் மீனினவை காண்பெண் காண் எல்லா பகலில் விண்மீன் விழுவது போலவும், இரவில் வானவில் தோன்றுவதும், பகற்பொழுதில் விண்மீன்கள் எரிந்து விழுதல் இந்தக் காட்சிகளைத் தான் கனவில் கண்டதாக கோப்பெருந்தேவி குறிப்பிடுகின்றாள். இந்த நிகழ்வினை காணும்போது அரசன் அழிவின் அடையாளங்களாகக் அமைகின்றது (Arivu Nambi, 2017).

## அகத்தியர் இட்ட சாபம்

இந்திரன் அவையில் சந்திரனாகத் திகழ்ந்த சயந்தனைக் காதலித்த நடனமாது ஊர்வசி. காதலின் நினைவால் நாட்டியம்; ஆடினாள். இதனால் அகத்தியர் கோபமுற்று ஊர்வசியை மண்ணுலகில் பூம்புகாரில் நாட்டியக் குலத்தில் பிறக்கச் சாபம் பெற்றாள். சயந்தன் மூங்கிலாக அதுவும் மாதவி நடன அரங்கம் செய்யும் பூம்புகார் நடன அரங்கில் தலைக்கோலுக்கு அணிசெய்யும் மூங்கிலாச் சாபம் விமோசனம் பெற்றாள். 'காவல் வெண்குடை மன்னவன் கோயில் இந்த சிறுவன் சமயந்தன் ஆக என வந்தனை செய்து, வழிபடு தலைக்கோல்' என்று அரங்கேற்றுகாதை பாடல் வரிகளின் மூலம் புலனாகிறது.

## வீடுபேறு குறித்த நம்பிக்கை

வீடு என்பதை வீடுபேறு, மோட்சம், முக்தி என்ற பெயர்களால் அழைக்கின்றார் இளங்கோவடிகள். செல்வத்தை தானம் செய்து துறவறம் மேற்கொள்ளப் பிறப்பாகிய கட்டிலிருந்து விடுபட்டு வீடு பேற்றை அடையலாம் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்தது. "இறுதியில் இன்பம் எனக்கு ஈங்கு உரைத்தால் வீடு கண்டவர் போல" என்று சிலப்பதிகாரத் தொடர்களால் வீடு பேறு பற்றிய நம்பிக்கையின் நிலைப்பாட்டை அறியமுடிகிறது.

## தமிழரின் நம்பிக்கைகள்

வானத்தில் அசரீரி தோன்றுதல், ஊழ்வினை, புனித நீராடுதல், மூலம் பாவம் போக்குதல், ஏழு பிறப்பு. ஏழுகடல் ஏழுமலைகள் என்று தமிழ் எண்களின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் என்றே சொல்லலாம். மனிதன் உலகில் ஏதோ ஒரு வகை நம்பிக்கை வைத்து தான் வாழ்கிறான் என்ற ஆய்வுகள் தற்போதைய உலகிற்கு வெளிப்படுத்த முடிவும் என்பதை நாம் மறுக்க முடியாத உண்மையாக உள்ளது என்பதை இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

## ஊழ்வினை பற்றிய நம்பிக்கை

சிலப்பதிகாரத்தின் மையக் கோட்பாடுகள் மூன்றனுள் ஒன்றாக ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பது சிலம்பு உணர்த்துகிறது. மக்களிடம் ஊழ்வினை பற்றிய நம்பிக்கை நெடுங்காலமாக இருந்து வருகின்றது. சங்க காலத்து மக்களிடமும் ஊழ் பற்றிய நம்பிக்கை இருந்தது. தொல்காப்பியர் களவொழுக்கத்திற்கு காரணமாக இருப்பது. ஊழ்வினையே எனக் கூறுகின்றார். முற்பிறப்பில் செய்த தீவினையால் இப்பிறப்பில் அவன் படும் இன்னல்களை எடுத்துக் கூறுவதற்கு கவிஞர்களும் மக்களும் கையாண்ட ஒரு சொல்லாக, அடையாளமாக காணப்படுகின்றது. காப்பியம் முழுவதும் ஆசிரியர் ஊழ்வினையால் பெரும்பாலும் நடப்பதாகக் குறிப்பிடுகிறார். கோவலன் மாதவி பிரிவதற்கும், கண்ணகியை மதுரைக்கு அழைத்துச் செல்வதற்கும், கோவலன் கொலையுண்டதற்கும் ஊழிவினையே காரணம் என்கிறார் (Manikkavasagan, 2016). ஊழ் நம்பிக்கையால் மக்கள் செயலிழந்து விடக்கூடாது என்பதற்காகவே திருவள்ளுவர் ஆழ்வினையுடைமை என்ற அதிகாரத்தினை பற்றி எழுதியுள்ளார். அந்தளவிற்கு ஊழ் மக்களிடம் பெரும் ஆட்சி பெற்றிருப்பதை இன்றும் அறியமுடிகிறது.

'ஊழ்வினை' என்பது முற்பிறப்பில் செய்த தீ வினையால் இப்பிறப்பில் அவளப்படும் இன்னல்களை எடுத்துக் காட்டுவதற்குக் கவிஞர்களும், மக்களும் கையாண்ட ஒரு சொல்லாகும். செங்கோல் பிழைத்தற்கும், கோவலன் கொலையுண்டதற்கும் ஊழே காரணம் என்பதை வலியுறுத்துகின்றார். ஆரம்ப காலம் தொட்டே மனிதர்கள் நம்பிக்கைக் கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள் என்பது அறியமுடிகிறது. இளங்கோவடிகள் தெய்வம் நாள்கோள் பார்த்தல், நிமித்தம் போற்றுதல். நற்கனவு இம்மை, தீக்கனவு, மறுமைபிறப்பு சார்ந்த நம்பிக்கை போன்ற பல்வேறு நம்பிக்கைகள் குறித்து பேசப்படும் காப்பியம் எனவும் போற்றுதலுக்குரிய காப்பியம் என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் உண்மையின் நிலவரத்தை படம் பிடித்துக் காட்டுகிறார். இதை யாராலும் மீற இயலாது என்றும் எடுத்துரைக்கின்றார்.

## முடிவுரை

சிலப்பதிகாரம் மக்களின் பண்பாடாக இந்த நம்பிக்கை விளக்குகிறது. அவலச் சுவை நிரம்பிய காப்பியமாதலை சுப சகுணங்களை விட அபச குணங்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளது. நாம் செய்யும் செயல்களின் மூலம் பாதிக்கக் கூடியவர்கள் மனம் நொந்து, கோபப்பட்டு சொல்லுகின்ற சொற்கள் பலிக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி வருகின்றன. ஆரம்ப காலம் தொட்டே மனிதர்கள் நம்பிக்கைகளைக் கொண்டு வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதை அறியும் விதமாக அமைந்துள்ளது. மக்களிடையே உண்டான நம்பிக்கைகள் பசும்மரத்தானி போல அவர்கள் மனதில் இன்றும்

நிலைத்திருக்கிறது என்பதற்கு சிலப்பதிகாரமே ஓர் சிறந்த உதாரணமாக விளங்குகிறது. செங்கோல் பிழைத்தற்கும், கோவலன் கொலையுண்டதற்கும் ஊழே காரணம் என்பதை வலியுறுத்துகின்றார். ஆரம்ப காலம் தொட்டே மனிதர்கள் நம்பிக்கைக் கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள் என்பது அறியமுடிகிறது. தமிழரின் அந் நம்பிக்கையில் அறிவும் கொண்டு வாழ்ந்தான் என்று தற்போதைய ஆய்வுகள் உலகிற்கு வெளிப்படுத்துவதை நாம் மறுக்க முடியாத உண்மையாக உள்ளது என்பதை இக்கட்டுரையின் மூலம்; அறியமுடிகின்றது. மனிதன் தன் ஆற்றல் ஓர் வரம்புக்குட்பட்டது என்பதை உணர ஆரம்பித்த நிலையில் கடவுள் பற்றிய நம்பிக்கையை ஊட்டியது.

## References


Arivu Nambi, A., (2017) Kotpaattiyal Nokkil Silappathigaram, New Century Book House, Chennai, India.

Manikkavasagan, G., (2016) Silappathikaram, Uma Pathippagam, Chennai, India.

Natarajan, T.S., (2017) Silappathikaram, New Century Book House, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License